DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. தமிழழகன் | Father/Husband Name : எட்வின் |
| Age : 61 | Village : வெம்பக்கோட்டை |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10.04.2026.

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வெம்பக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன்.

2. கடந்த 2019ம் வருடம் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 04.04.2019ம் தேதி 21.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது இவ்வழக்கின் வாதியான சிவகாசி வட்டம், சல்வார்பட்டி கிராம கூடுதல் பொறுப்பு மற்றும் தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலரான திரு.கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 142/2019 பிரிவுகள் 286 இ.த.ச மற்றும் 9(B)(1)(a) IE Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2 சாத்தூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றினை நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு சமர்ப்பித்தேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. புகார் மனுவை அ.சா.1 கணேசன் எங்கு வைத்து எழுதிக் கொண்டு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புகார் மனு வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புகார் மனு கணேசனின் மேல் அதிகாரி மற்றும் காவல்துறையை சார்ந்த அதிகாரிகளின் யோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

10 Apr 2026 11:55

Judicial Magistrate 2, Sattur.